04.12.2024 MCOP.No.54/2021 PW1 Name :.**சண்முகம்**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கபட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1. விபத்து பற்றி எனக்கு நேரில் தெரியாது. விபத்து சமயத்தில் என்னுடைய தாயாருக்கு வயது சுமார் 65 வயது முதல் 70 இருக்கும். அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். என் தாயாரின் வயது 75 வயதிற்கு மேல் இருக்கும் என்றால் சரியல்ல. 17.11.2020ல் விபத்து நடந்தது. இரவு 10 மணிக்கு விபத்து நடந்தது என்றால் தவறு. வழக்கு ஆவணங்களில் இரவு 10 மணி என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் தவறு. விபத்தை யார் ஏற்படுத்தினார் என்று எனக்கு நேரில் தெரியாது.
2. டிராக்டர் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. என் சகோதரர் ஆறுமுகம் தான் டிராக்டரை ஓட்டினார். நான் இந்திரா நகரில் வசிக்கிறேன். எங்கள் வீட்டிலிருந்து ரோட்டிற்கு வருவதற்காக வழி குறுகிய சாலை என்றால் சரியல்ல. என் தாயாரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு பின் என் தாயாரை அரசு மருத்துவமனைக்கு கூட்டி செல்லவில்லை. தனியார் மருத்துவமனையில் தான் சிகிச்சை பார்த்தோம். அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம்.
3. வேலுர் அரசு மருத்துவமனைக்கு சென்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தனியார் மருத்துவமனை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. 15 நாள் கழித்து தான் புகார் கொடுக்கபட்டுள்ளது என்றால் 5 நாள் கழித்து புகார் கொடுத்துள்ளோம். வேறு விபத்தின் காரணமாக என் தாயார் இறந்துள்ளார் என்றால் சரியல்ல. மனுவில் கூறபட்டுள்ள விபத்திற்கும் என் தாயார் இறப்பிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

4. அதனால் தான் சடலகூராய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் விசாரித்தார்கள். அது தொடர்பாக வழக்கு பதிவு செய்யபட்டதா என்று தெரியவில்லை. விபத்து காரணமாக என் தாயார் இறக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடன் பிறந்த மற்ற 8 நபர்களுக்கும் திருமணம் ஆகிவிட்டது. அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்தோம். என் தாயார் தான் எங்கள் குடும்பத்தை கவனித்து வந்தார். பல்வேறு தலைப்புகளில் நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 04/12/2024 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

Sd/B.ராஜா,
சார்பு நீதிபதி
வாணியம்பாடி.